## கல்லூரியைப் பற்றி...

சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, மதிப்பிற்குரிய நிறுவனர் பத்மபூஷண் ஸ்ரீ என்.ராமஸ்வாமி ஐயர் அவர்களால் நிறுவப்பெற்ற பெருமைமிகு மகளிர் கல்வி நிறுவனமாகும். தந்தை வழியில் கல்விச் சேவையினைப் புரிந்து வரும் அறப்பணிச் செம்மல் திரு ரா.பஞ்சாபகேசன் அவர்களின் பணி போற்றுதற்கு உரியது. பெண்கல்வி ஒன்றே சமுதாயத்தை முன்னேற்றும் என்ற உயரிய சிந்தனையைக் கொண்ட தகப்பனாரின் கல்விப் பணியினைத் தொலைநோக்குப் பார்வையோடு நிர்வாக இயக்குநர் திரு.ரமணி பஞ்சாபகேசன் அவர்களும் மற்றும் கல்வி இயக்குநர் முனைவர் திரு.கண்ணன் பஞ்சாபகேசன் அவர்களும் திறம்பட செயலாற்றி வருகின்றனர்.

1951-ஆம் ஆண்டு பெண்கல்வியானது சமூகத்தில் பின்தங்கியிருந்த காலகட்டத்தில் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கும் உன்னத நோக்கத்துடன் திரு.என்.ராமஸ்வாமி ஐயர் அவர்கள் உருவாக்கிய பத்மபூஷண் ஸ்ரீ என்.ராமஸ்வாமி ஐயர் கல்வி வளாகத்தின் ஓர் அங்கமான சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு 1987-ஆம் ஆண்டு முதல் தன்னாட்சி நிலையை அடைந்தது. தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் A+ தர (4-ஆவது சுழற்சி) அங்கீகாரம் பெற்றது. இந்திய பாரம்பரியம் மற்றும் கலாச்சாரக் கட்டமைப்புடன் பண்பாட்டுடன் கூடிய சிறப்பான கல்வியை ஒவ்வொரு ஆண்டும் 4000-த்திற்கும் மேற்பட்ட மாணவியருக்கு வழங்கி வருகின்றது. நிதி மற்றும் பெரு நிர்வாக விவகாரங்களுக்கான மாண்புமிகு அமைச்சர் ஸ்ரீமதி.நிர்மலா சீதாராமன் அவர்கள் இக்கல்லூரியில் 1977-1980 வரையிலும் தனது இளநிலை பொருளாதாரப் பட்டப்படிப்பைப் பயின்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னார் அவர்கள் எங்கள் முன்னாள் மாணவி என்பதைப் பதிவு செய்வதில் பெருமை கொள்கின்றோம். 2026 ஆண்டு பவளவிழா காணும் இத்தகு தனிச்சிறப்பு வாய்ந்த இக்கல்லூரி மகளிர் கல்வி தன்னை உலக அரங்கில் நிலைநாட்டி வருகின்றது.

## தமிழ்த்துறையினைப் பற்றி.....

சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரியின் தமிழ்த்துறை 1979-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்த்துறை இலக்கிய மன்றத்தின் கீழ் பல்வேறு மன்றங்கள் மாணவியரின் படைப்பாக்கத் திறனையும், இலக்கிய அறிவையும் மேம்படுத்தி வருகின்றன. மாணவியர் படைப்பாக ஆண்டுதோறும் சிற்றிதழ், மாதிரி செய்தித்தாள் வெளியிடப்பட்டு வருகின்றன. நிறுவனர் பிறந்தநாளை முன்னிட்டு கல்லூரிகளுக்கு இடையிலான பல்வேறு கலை, இலக்கியப் போட்டிகளும், பன்னாட்டு அளவிலான தமிழ்ப்பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. உலகளவில் தமிழ்மொழியின் வளர்ச்சி மேம்பட பல்வேறு பயிலரங்குகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை சிறப்புடன் நடத்தி வருகின்றது.

## சிறகை விரி (TECH FEST)......

"பெண்ணின் பெருந்தக்க யாவுள" என்ற வாக்கிற்கு ஏற்ப பெண் என்னும் பெரும் சக்தியால் உலகம் மேன்மை அடைகின்றது. அத்தகு பெண்ணின் படைப்பாற்றலை முன்னிறுத்தி "சிறகை விரி" என்ற பெயரில் TECH FEST -ஐ நடத்திட திட்டமிட்டுள்ளோம். அதன்படி கீழ்க்கண்ட போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

## போட்டிகள்

- கதை சொல்லுதல்

  தலைப்பு : விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு
- பார்த்துப் பேசுங்கள்

  (காட்டப் பெற்ற படம் குறித்து இரண்டு நிமிடம் பேசுதல்)
- எண்ணங்களை வண்ணமாக்கு (ஓவியம்)

  தலைப்பு : சாதிக்கப் பிறந்தவள்
- கவிதையே கவி எழுது (கவிதைப் போட்டி)

  தலைப்பு : வானம் வசப்படும்
- மாத்தியோசி (கட்டுரைப்போட்டி)

  தலைப்பு : தன்னம்பிக்கையே வெற்றியின் சிறகு

## போட்டிக்கான விதிமுறைகள்

- பிற கல்லூரிகளில் இருந்து மாணவிகள் மட்டுமே பங்கேற்க இயலும்.
- ஒருவர் எத்தனை போட்டிகளில் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்
- ஒரு போட்டிக்கு பதிவுக்கட்டணம் ரூ 50
- ஒருவர் இரண்டு போட்டிகளில் கலந்து கொள்வதானால் ரூ 100 பதிவுக்கட்டணமாக செலுத்த வேண்டும்.
- பங்கேற்பாளர் போட்டி நடைபெறும் நாளன்று பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.
- பங்கேற்கக்கூடிய மாணவிகள் கீழ்க்கண்ட புலனக்குழுவில் இணைந்திட அன்புடன் வேண்டுகின்றோம்
- https://chat.whatsapp.com/L7sSItS6iY7FMSmo4B8zan?s=cl&p=a&ilr=1
- கீழ்க்கண்ட Google Form Link ஐ பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்
- https://forms.gle/DC3kJpVCDJ1Jurrf7
- பங்கேற்கக் கூடிய மாணவிகள் கல்லூரியிலிருந்து வழங்கப்பட்ட ஆளறிச்சான்றிதழ் அல்லது அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்து வருதல் வேண்டும்.
- போட்டியாளர்கள் நேரில் மட்டுமே கலந்து கொள்ள முடியும். இணையவழியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு இல்லை.
- போட்டி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்
- போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஓவியம் வரைய தாள் மட்டும் வழங்கப்படும். வரை பொருட்கள் மாணவிகள் பொறுப்பு.


சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி
(தன்னாட்சி)
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது
திருச்சிராப்பள்ளி
*Accredited with A+ by NAAC (4th Cycle)*


# தமிழ்த்துறை
# TECH FEST - சிறகை விரி!

### அறிவிப்பும் அழைப்பும்

**போட்டி நிகழும் நாள்**
**28.08.2026**



உன் கனவுக்குச் சிறகுகள் உண்டு
விரித்திடு! பறந்திடு! உயர்ந்திடு!

**இடம்**
**GSR அரங்கம்**

**நேரம்: காலை 10.00 மணி**